**மிகவும் அவசரம் / தனிக்கவனம் / இன்றே**

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,**

**சென்னை - 600 006**

**ந.க.எண். 048620/ எம் / இ4 / 2020, நாள்:22.09. 2020**

பொருள்: பள்ளிக்கல்வி - மத்திய அரசின் உதவித்தொகைத் திட்டம் - தேசிய வருவாய் வழி திறன் தேர்வு (National Means-cum-Merit Scholarship Scheme) 2009-10 (NMMS தேர்வு ஆண்டு 2008) முதல் 2017-18 (NMMS தேர்வு ஆண்டு 2016) வரை **இணைய வழியில் அல்லாமல் offline இல் விண்ணப்பித்து** இதுவரை NMMS உதவித்தொகை வழங்கப்படாமல் விடுபட்ட மாணவ / மாணவியர்களின் சரியான தகவல்களை நடைமுறையில் உள்ள வங்கிக்கணக்கு விவரங்களுடன் 27.09.2020க்குள் அனுப்பிவைத்தல்- சார்பு.

பார்வை:
1. மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் 21.08.2020 தேதியிட்ட F. No. 15-1/2017 – SS, **மின்னஞ்சல் கடிதம்.**
2. மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் 07.09.2020 தேதியிட்ட D.O. No. 1-15/2017-SS, **மின்னஞ்சல் கடிதம்.**

**********

பார்வையில் காணும் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் கடிதங்களின்படி எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு கடந்த 2008ஆம் ஆண்டு முதல் தேசிய வருவாய்வழி திறன் தேர்வு ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு அத்தேர்வில் தேர்ச்சி பெற்று தேசிய வருவாய்வழி திறன் தேர்விற்கான உதவித்தொகைக்கு தகுதிபெறும் மாணவ மாணவிகளுக்கு அவர்களின் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஒரு ஆண்டுக்கு தலா ரூ. 12,000 அவர்களது வங்கிக்கணக்கிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், தமிழகத்திலிருந்து 6695 மாணவ மாணவிகள் இவ்வுதவித்தொகைக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

முதன்முதலில், இவ்வுதவித்தொகைத் திட்டம் 2009-10 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆனால், 2018-19 ஆம் ஆண்டில் National Scholarship Portal என்ற இணையதளத்தைத் துவக்கி அதன் மூலமாக தகுதியுடைய மாணவர்களே நேரடியாக இவ்வுதவித்தொகைக்கு விண்ணப்பிக்க அறிவுரை வழங்கப்பட்டது.

தற்போது, 2009-10 (NMMS தேர்வு ஆண்டு 2008) முதல் 2017-18 (NMMS **தேர்வு ஆண்டு 2016) வரை இணைய வழியில்** (National Scholarship Portal) **அல்லாமல் offline இல் விண்ணப்பித்து** இதுவரை NMMS உதவித்தொகை வழங்கப்படாமல் விடுபட்ட மாணவ / மாணவியர்களின் சரியான தகவல்களை

நடைமுறையில் உள்ள வங்கிக்கணக்கு விவரங்களுடன் 27.09.2020க்குள் மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் உதவித்தொகை வழங்கப்படாமல் விடுபட்ட Offline modeல் விண்ணப்பிக்கும் மாணவ மாணவியரின் விண்ணப்பங்களைப் பரிசீலிக்க இயலாது என பார்வையிற்காண் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் காரணத்தாலும் இணைய வழியில் Online மூலமாக National Scholarship Portalல் விண்ணப்பிக்கும் மாணவ மாணவிகளின் விடுபட்ட விண்ணப்பங்கள் ஏற்கனவே மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்ந்த பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாலும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் இப்பொருள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனடியாக கோரப்பட்டுள்ள தகவல்களை 27.09.2020 க்குள் jdnsed@nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதில் எவ்வித சுணக்கமும் இன்றி செயல்பட்டு அம்மாணவர்களின் விவரங்களை வங்கிக்கணக்கு நடைமுறையில் உள்ளதையும் சரிபார்த்து உதவித்தொகைக்கு தகுதியுடைய விடுபட்ட அனைத்து மாணவ மாணவிகளும் பயனடைய ஆவன செய்யுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு: பார்வையில் காணும் கடிதங்கள்.**

பள்ளிக்கல்வி இயக்குநர்

22/9/20

**பெறுநர்:-**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**நகல்:-**

அரசு முதன்மைச் செயலாளர்

பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை - 9

- அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.